ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

अनावृताङ्गः पतितो महोदधौ न कामयेतांबुभिराप्लवं यथा ।
भवार्णवे मां तदवाप्तिजा रुजो मैव भूवन्निति तद्वदक्रमः ॥

"கண், காது, மூக்குமுதலிய அங்காவயவங்களை மூடிக்கொள்ளாமல் மஹா ஸமுத்திரத்தின் மத்தியில் விழுந்தவன் கண் காது மூக்குகளில் ஜலம் பூரக்கூடாதென்று நினைப்பது உசிதமாகாதல்லவா! அதுபோல் இந்திரியங்களை அடக்கிக்கொள்ளாமல் பவ (ஸம்ஸார)க் கடலில் விழுந்துவிட்டு அதனின்று உண்டாகும் உபத்திரவங்கள் எனக்கு வரவேகூடாது என்று நினைப்பது அக்கிரமமான கார்யமாம்" நல்லதையும், கெட்டதையும் பிரமாண ஆராய்ச்சிசெய்துப் பிரித்துத் தெரிந்துகொள்ள சக்திவாய்ந்த புத்தியை அடைந்திருப்பவன் பைத்தியக்காரனைப்போல் படுகுழியில் விழுந்து பரிதபித்துப் புலம்புவது அவன் தன்மைக்குப் பொருந்தாத கார்யம். புத்தி ஸ்வாதீனமில்லாதவன் புத்தியையும், மற்ற இந்திரியங்களையும் கெட்ட விஷயத்தில் விடாமல் அடக்கச் சக்தியற்றவனானதையால் அந்தப் பிரக்ஞாபராதத்தினால் பலவித கஷ்டங்களுக்கு ஆளாகிறான். அதுபோலவே தன் புத்தி ஸ்வாதீனமாயிருப்பதாகச் சொல்லிக்கொள்பவனும் கஷ்டப்படுவானாகில் புத்தியைப் படைத்ததின் பயன் என்ன? சமுத்திரம் மிக ஆழமாயுள்ளது. மனிதர்களையும் விழுங்கும் திமி, திமிங்கலாதிகளாகிய பெரிய பெரிய ஜந்துக்களடர்ந்தது. ஆகவே அதன் மத்தியில் தெரியாத்தனமாய்த் தவறி விழுந்துவிட்டால் தப்பிப் பிழைத்து உயிரோடு கரையேறுவதற்கு முடியாது என்று தீர்மானமாகத் தெரிந்துகொள்ளத் திறமையில்லாத பாலகன், பைத்யக்காரன் போன்றவர்கள் தவறி விழுந்துவிடலாம் அதுவே மிகவும் சோகப்படவேண்டியதாகும். சமுத்திரத்தின் காம்பீர்யத்தையும், அதில் வாழும் ஜந்துக்களின் சாமர்த்தியத்தையும் நன்றாகத் தெரிந்துகொண்டவன் வேணுமென்றே தோணியேறி நடு சமுத்திரம் சென்று விழுந்து ஜந்துக்களால் விழுங்கப்பட்டு உயிரிழப்பது மிகவும் வருந்தத்தக்கதென்பற்குக் கேழ்ப்பானேன். இதுபோல் ஸம்ஸார ஸ்வரூபத்தை அறியாதவன் அதிலீடுபட்டு வருத்தப்படுவது வழக்கமாயினும் வருந்தத்தக்கதே. அப்படியிருக்கையில் ஸம்ஸார ஸாகரம் அதிக ஆழமுள்ளது. விசேஷமாய் விரிந்து கிடப்பது கடூரமான காமக்குரோதாதிகளென்னும் மகர மத்ஸ்யங்கள் அடர்ந்ததா யுள்ளது. அதில் பிரவேசித்தமாத்திரத்தில் மனிதனைப் பரவசமாக்கிப் பிராணனையுமிழக்கும்படி செய்துவிடக்கூடியது என்பதாதியாக ஸம்ஸாரத்தின் ஸ்வபாவத்தை சாஸ்திர ஆராய்ச்சிசெய்து செம்மையாய்த் தெரிந்துகொள்ளக்கூடிய யுத்திவீர்யத்தைப்பெற்றவனும் அதைக் கிஞ்சித்தேனும் கெவனித்துப்பார்க்காமல் வேணுமென்றே பிரியப்பட்டு அதில் பிரவேசித்துப் பலவழியாலும் விஷயப் பிரபாவம் புகுந்துவிடவே போகும் வழி புரியாமல் கூழில் அமிழ்ந்த ஈக்கள்போல் அழிந்து கிடப்பது எவ்வளவு பரிதாபமானது; பாருங்கள். இந்திரியங்களை அடக்கிக்கொண்டு விஷயாசை கொள்ளாமல் வைராக்யத்தோடு நின்றால்: இந்த நிலையைக்கண்ட பெரியோர்கள் பரமகருணையுடன் கரையேற்றுவார்கள். அப்படியே யாவரும் கரையேரி பேரின்பவீடு அடைவார்களாக.

பத்திராதிபர்.

50

ஆர்ய தர்மம்.

ஆங்கிரஸ-௵ வைகாசி ௴ ௧௰௨

பவப்பிணிபிடித்துப் பரிதபிப்பானேன்?

பவப்பிணியொழித்துப் பரமானந்தமாயிருக்கப் பல வழியிருந்தும், பல பிராணிகள் அந்தப் பீடைநோய் பிடித்துப் பலவிதத்திலும் பரிதபிக்கிறார்கள். இப்படிப் பரிதபிப்பானேன்? அதை ஒழிக்க நம் முன்னோர் வழிகளைக் காட்டியிருக்கவில்லையா? அந்தந்த அதிகாரத்திற்குத் தக்கவாறு அளவிறந்த ஸாதனங்களை அன்போடு வெளியிட்டிருக்கிறார்கள். சரீரத்திலுள்ள தோஷங்களாகிய வாத, பித்த, கபங்களின் ஏறக்குறைவாலேற்பட்ட பலவித ரோகங்களுக்கேற்றபடி அவைகளை அகற்றி ஆரோக்யத்தை அடையப் பலவித ஔஷதங்களை ஏற்படுத்தியிருப்பதுபோல், மனதிலுள்ள தோஷங்களாகிய ரஜோகுண தமோகுணங்களின் ஏற்றக் குறைவுக்கேற்றபடி ஏற்பட்ட ஜன்மஜராமரணாதிகளான ரோகங்களை விலக்கி சாசுவதப் பேரானந்தம்பெற பல வழிகளைக் காட்டியிருக்கிறார்கள். பவப் பிணியை நீக்குவதற்காகவே ஆஸுரமானுஷ சிகித்ஸைகளைவிட மிக உயர்ந்ததான தைவ சிகித்ஸை செய்யும் முதல்தர வைத்யனாகப்பரமேசுவரனே அமர்ந்தாரென்று அன்புள்ள அன்னையைவிட ஆயிரமடங்கு அதிகமான சுருதி சுயமாகவே போதிக்கின்றது. அத்தகைய பரமேசுவர ஸ்வரூபத்தைத் தெரிந்துகொள்ளவும் நேரில் காணவும் சக்தியில்லாதவர்களையும் உபேக்ஷை செய்துவிடாமல் பரமேசுவரன் அவர்கள் கண்ணில் படக்கூடியவர்களிடத்தில் தன் சக்தியைப் பிரித்துப் பரப்பிவிட்டிருக்கிறார். அந்த மஹான்களைப் பார்க்கக்கூடிய ஸ்திதியிலிருந்தும் பாக்கியமிழந்த சில பாபயோனிகள் பாதையில் போட்டிருக்கும் பணமுடிப்பைப் பார்த்தெடுக்கும் பதத்திலிருந்தும், பொட்டையன் எப்படிக் கண்தெரியாமல் நடக்கிறான் என்பதைக் கண்ணை மூடிக்கொண்டு நடந்துபார்ப்போமென்று பணமுடிப்புக் கிடக்குமிடத்தில்கண்ணை மூடிக்கொண்டுபோன பாக்கிய

ஹீனன்போல் பெரியோர்களைக் கண்ணெடுத்துக்கூட பார்ப்ப தில்லை. அப்படியிருக்கையில்பெரியோர்கள் வலுவிலேவந்து ஹிதத் தைப் போதித்தாலும் ஏதோ ஒரு சின்ன ஸ்வப் பிரயோஜனத் தைக் கருதி ஹிதோபதேசமென்ற வியாஜம் வைத்துக்கொண்டு திரிகிறார்களென்று சொல்லிவிடத் துணிவார்களேயன்றி அவர் களது அருமையான மொழியைக் கேழ்க்கப்போகிறார்களா? இல்லவேயில்லை. இந்த நிலையில் பெரியோர்கள்தான் என்ன செய்வார்கள்? பரமேசுவரனே பலவாராகத் தோன்றி பல விதத் திலும் உதவிபுரிந்திருக்க, உயர்ந்த ஜன்மத்தை வீணடிக்கின் றார்களேயென்று வருந்துவார்கள். பின்னிட்டு ஒருகாலத்தில் பெரிய கஷ்டத்தை அநுபவிக்கும்பொழுது அந்தப் பாபிகளுக் கும் இது தோன்றாமற்போகாது. காவ்யம் படிக்கும் குழந்தை களும் தெரிந்துகொள்ளுமாறு ஒரு பெரியவர்

शास्त्रं भूरि निजस्वरूपमतये स्वाराधनार्थं वपुः
स्वध्यानाय मनश्च बुद्धिमनघां लब्धुं च तीर्थादिकम् ।
तत्वान्यप्युपदेष्टुमुत्तमगुरून् दत्वाऽनुगृह्णाति नः
संसारे तदपि भ्रमेम यदि किं कुर्वीत सर्वेश्वरः ॥

'தன் ஸ்வரூபத்தைத் தெரிந்துகொள்வதற்காகப் பல சாஸ்திரங் களையும், தன்னை ஆராதிப்பதற்காகவே சரீரத்தையும், தன்னைத் தியானம் செய்வதற்காக மனதையும், தீர்த்தாதிகளை ஸேவிக்கப் பரிசுத்தமான புத்தியையும், தத்துவங்களையுபதேசிக்க உத்தம குருமார்களையும்தந்து தயையினால் பரமேசுவரன் நம்மையெல்லாம் அநுக்கிரகிக்கின்றார். அப்படியிருந்தும் நாம் அவ்வழி நாடாமல் ஸம்ஸாரத்திலேயே திரிவோமானால் ஸர்வேசுவரன் என்னசெய் வார்'' என்று கூறியிருக்கின்றார். ஸாதனமில்லையே யென்றாவது அது இருந்தும் அறிய வழியில்லையே என்றாவது குறை கூறும் படி கடவுள் வைக்கவில்லை. பவப்பிணிபிடித்துப் பரிதபிக்கவும் விடவில்லை. அவர் சரியான வழியைத்தான் கற்பித்திருக்கிறார் அதை ஜீவராசிகள்தான் சரியானபடி தெரிந்துகொள்ளவில்லை, அதிலும் தற்காலத்தியவர்களுக்கு முற்றிலும் விபரீதமாகவே தோன்றுகின்றது. யார்செய்த தீவினையோ? யாரிட்டசாபமோ? தெரியவில்லை. ஆகாத காலத்திற்கு அன்னத்துவேஷம் போராத காலத்திற்குப் பிரம்மத்துவேஷம் என்று சொல்லுவதற்கிணங்கி

எங்குபார்த்தாலும் ப்ரம்மத்துவேஷம் பரவிவிட்டது. பிராம்மணனே பிராம்மணனை துவேஷிக்கிறான். தற்காலத்தியவர்கள் பொதுநலமென்று பெயரைச் சொல்லிக்கொண்டு சுயநலத்தில் சுருசுருப்பாயிருக்கிறார்கள்—என்பதைத்தெரிந்து கொள்ளாதவர் ஒருவருமில்லை. அப்படியிருந்தும் பத்திரிகைகளில் பிரசுரிப்பதைப்பார்த்தால் புத்தியுள்ளவனும் பிரமிக்கும்படி எழுதி விடுகிறார்கள். இதையெல்லாம் கண்டு பிரமித்து பூர்வ புண்ணிய வசத்தால் கிடைத்தற்கரிதான பாரதநாட்டில் கிடைத்த புனிதமான பிறவியைப் பாழாக்கிவிடாமல், பரமேசுவரனையும், அவரது ஸ்வரூபமான பக்த சிகாமணிகளான மஹான்களையும் அநுஸரித்து அவர்கள் உபதேசித்திருப்பது உண்மையிலே புருஷார்த்தப் பிராப்தி ஸாதனமென்று உருதியாய் நம்பி அதன்படியே நடந்து ஆத்துமாவை பவப்பிணிக்கு ஆளாக்கிவிடாமல் அவன் கரையேரும் வழியை நாடி எல்லோரும் பரமானந்தமடைவார்களாக. இது தான் பரமேசுவரனுக்கும் பெரியோர்களுக்கும் பிரியமானது. பெரியார் பிரியப்படுவதையே பெரிதாக நினைக்கவேண்டும். நம் முன்னோர் சென்றவழி இதுவே, இதையே கைப்பிடித்துயாவரும் இஹபர சிரேயஸ்ஸைப் பெறுவாராக. சுபம்.

பத்திராதிபர்.

மத்வாவதாராத்புதலீலாரகஸ்யங்கள்

मध्वमतमोक्षमहिमाभिख्यं सप्तमरहस्यमद्याहम् ।
श्रोतृजनहास्यहेतुं विशदीकरवाणि विश्वसन्तुष्ट्यै ॥

கேழ்க்கும் ஜனங்களுக்கு ஹாஸ்யத்தை உண்டுபண்ணக் கூடிய மத்வமத மோக்ஷமஹிமை என்கிற ஏழாவது மத்வாவதாராத்புத லீலாஹஸ்யத்தை ஸமஸ்தமான ஜனங்களுடையவும் திருப்தியின்பொருட்டு இப்பொழுது நான் வெளியிடுகிறேன். அதைப்பார்த்து ஆர்யதர்மாபிமானிகள் மத்வமதத்திலுள்ள உண்மையான ஆபாஸங்களை அறிவார்களாக.

மத்வமதத்தில் அணுக்களாயும் பரதந்திரர்களாயும் உள்ள ஜீவர்களுக்கு மாறுதலாய் விபுவாயும், ஸ்வதந்திரராயும், ஒருவித

தோஷமுமில்லாதவராயும், ஸமஸ்த கல்யாணகுணங்களோடு கூடி னவராயுமுள்ள ஸ்ரீமந் நாராயணனுகிய பரமாத்மாவைப் பிரதிபா திக்கும் கர்மகாண்டஜ்ஞானகாண்ட வேதராசிக்குள் சக்திக்குத் தக்கவாறு ஸகலவேதங்களையும் அத்யயனம்செய்து ஒவ்வொரு வேதவாக்யங்களுக்கும் மத்வாசாரியாள் செய்த ஸித்தாந்தப்ப டிக்குள்ள அர்த்தங்களை உத்தமராய் ஸர்வக்ஜ்ஞராயுள்ள ஒரே குருவினிடத்திலோ, அவ்வித குரு கிடைக்காமல்போனுல் பல குருக்களிடத்திலோ தனது அஜ்ஞானம் விலகும்வரையில் ஒரே தடவையிலோ பலதடவைகளிலோ குரு சொன்னபடி ஆக்ஷேபிக் க்காமல் கேட்டுத் தெரிந்துகொள்ளுவதாகிய, சிரவணம்செய்து அத்துடன் மத்வ வேதாந்த படன பூர்வாங்கமாயுள்ள பிரும்ம தர்க்கம் முதலிய சில அங்கவித்யைகளையும் நன்கு அப்பியஸித்து விட்டுப் பிறகு அவ்விதம் குருமுகமாகக் கேட்டுத் தெரிந்து கொண்ட தனது ஜ்ஞானம் திருடப்படுவதற்காக அதிலுள்ள ஸந்தேஹம் முதலியது விலகுவதின் பொருட்டு உபக்ரமாதி நியா யங்கள் மற்றுமுள்ள நியாயங்கள் இவைகளை மனனவிதியை மூலமாகக்கொண்ட பிரும்ம மீமாம்ஸா சாஸ்திரத்திற்கு மத்வர் செய்த பாஷ்யப்படிக்கு விசாரம் செய்வதாகிய மனனம்செய்து பிறகு அதே அர்த்தங்களை நிரந்தரமாகச் சிந்திப்பதாகிய நிதித்யா ஸனம்செய்து பிறகு பரமேசுவரனுடைய அபரோக்ஷஜ்ஞானம் வந்து அதனுல் பகவானுடைய பிரஸாதம் ஏற்பட்டு பிற்பாடு ஜீவர்கள் முக்தியை அடைகின்றூர்கள். இவ்விதம் முக்தியை அடையும் யோக்யதை சில ஜீவர்களுக்குத்தான் உண்டு. அதைக் கூறுவாம். மத்வமதத்தில் பகவான் நாராயணன் ஒருவரே ஸ்வ தந்திர சேதனன். மற்றவர்களெல்லாம் பாதந்திரர்கள். பாதந் திரர்களாகிய சேதனர்களுக்குள் லக்ஷ்மி ஒருவளே நித்ய முக் தையாய் ஒருநாளும் துக்க ஸம்பந்தமில்லாதவளாயுள்ளவள். பிரும்மா, சிவன், முதலிய ஜீவர்கள் துக்கஸம்பந்தமிருந்து பிறகு பகவத் பிரஸாதத்தால் முக்தியை அடைந்தவர்கள். ஸம்ஸாரிக ளாயுள்ள மற்ற ஜீவர்களுக்குள் சிலர்களுக்கு முக்தியை அடை யும் யோக்யதை உண்டு. சிலர்களுக்கு அது இல்லவேயில்லை. அஸுரர்கள், ராக்ஷஸர்கள், பிசாசங்கள், மனுஷ்யாத்மர்கள் முத லியவர்கள் முக்தியை அடையும் யோக்யதையே இல்லாதவர்கள். அவர்கள் தமோயோக்யர்கள். அவர்களுள் சிலர் எப்பவும் ஸம் ஸாரபந்தத்திலேயே இடைவிடாமல் சுற்றிக்கொண்டிருப்பார்கள்.

சிலர் மீளாத அந்த தமோலோகத்திற்குப் போவார்கள். அவர்கள் அடையும் அந்த தமோலோகப் பிராப்திக்கு அஸந் முக்தி என்றுபெயர். அதற்கு முக்தி என்று என்னபெயர் என்று கேழ்க்கக்கூடாது. மத்வர் சொல்லிவிட்டார். பரமாத்மாவும் ஜீவனும் ஒன்று என்று அத்வைதிகள் நினைப்பது பகவதபராத மானதால் பகவான் அவர்களிடத்தில் கோபங்கொண்டு அவர்களை அதோகதியை அடையச்செய்கிறார். ஆகையால் ஆஸுரஸ்வபாவம் உள்ள ஸ்மார்த்த ஜீவர்கள், சைவஜீவர்கள், முக்தியோக்யர்களன்று, அவர்கள் தமோயோக்யர்கள். மாத்வ ஜீவர்களே முக்தியோக்யர்கள். முக்தியை அடைந்தவர்கள் எல்லோருக்கும் ஒரே விதமான ஸுகம் கிடையாது. பகவான் ஸ்ரீமந் நாராயணன் ஒருவர்தான் பூர்ணமாயும் தனது ஸ்வரூபபூதமாயுமுள்ள பிரும்மானந்தத்தைத்தான் ஒருவருக்கும் பூராவாகக் கொடுக்காமல் ஏகதேசத்தில் உதரம்பரிகளைப்போல் அனுபவிப்பவர். தனது பத்னியாகிய லக்ஷ்மிதேவிக்குக்கூடத் தனது பிரும்மானந்தத்தில் ஏகதேசத்தைத்தான் அனுபவிக்கும்படி கொடுக்கிறார். பூராவாகக் கொடுக்க மனமில்லை. அவ்விதமிருக்க மற்றவர்களுக்குப் பூராவாகக் கொடுக்கமாட்டாரென்று சொல்லவேண்டுமா? பகவான் அந்தவிஷயத்தில் ரொம்பவும் லோபியாயுள்ளவர். முக்தர்களாயுமுள்ள மற்றவர்களுள் பிரும்மா ஒருவர்தான் மேலானவர். அவரும் லக்ஷ்மியைவிடக் கீழாக பிரும்மானந்தத்தின் ஏகதேசத்தில் ஓர் விசேஷத்தைத்தான் அனுபவிப்பார். சிவனே அவருக்கும் நூறுமடங்கு கீழாக பிரும்மானந்த ஏகதேச விசேஷத்தை அனுபவிப்பார். இவ்விதமே படிப்படியாக நூறு நூறுபங்கு கீழாகவே மற்ற முக்தர்களும் பிரும்மானந்த ஏகதேச விசேஷங்களையே அனுபவிப்பார்கள். இதுபோலவே ஜீவர்கள் தங்கள் தங்கள் ஸ்வரூபபூதமான ஆனந்தத்தையும் பலவித தாரதம்யத்துடன் கூடவே முக்தியில் அனுபவிக்கின்றார்கள். இவ்விதமே ஜ்ஞானத்திலும் ஐசுவர்யத்திலும் விஷயபோகத்திலும் அவர்களுக்கு முக்தியில் தாரதம்யமுண்டு. ஜீவர்களுடைய ஸ்வரூபபூதமான ஸுகம் ஒவ்வொரு ஜீவர்களுக்கு ஒவ்வொன்றாய் இருப்பதால் எண்ணிக்கையால் வித்யாஸப்படாமலிருந்தாலும் ஜீவர்கள் எல்லாருமே அணுக்களாயிருப்பதால் அவர்களுடைய ஸ்வரூபபூதமான ஸுகமும் அணுவாயிருக்குமாதலால் பரிமாணத்தால் வித்யாஸப்படாமல்போனாலும் ஜலபானத்தினாலும் அமிருதபானத்

திலும் உண்டான ஸுகங்களில் மதுரம், மதுரதரம் என்பது முதலிய வித்யாஸமுள்ளதுபோல ஜீவர்களுடைய ஸ்வரூப ஸுகத்திலும் ஸ்வரூபத்தினாலேயே பலவித வித்யாஸமுண்டு. அதனாலும் அவர்களுக்கு முக்தியில் ஸுகதாரதம்யம். ஜீவர்களுக்கு ஸ்வரூபபூதமான ஸுகம் ஸம்ஸாராவஸ்தையிலுமிருந்தாலும் அப்பொழுது வாஸ்தவமாயும் அத்வைதிகளது மதத்தில்போலப் பொய்யாக இல்லாததும் அனாதிபாவ வஸ்துவாயும் ஜீவனை ஆச்ரயித்ததாயும் ஒவ்வொரு ஜீவனுக்கு ஒவ்வொன்றாயுள்ளதும் மாயை பிரகிருதி முதலிய பெயர்களால் வழங்கப்படுவதும், திரவ்ய ரூபமாயும், பரமேச்வரனுடைய அபரோக்ஷ ஜ்ஞானத்தால் விலகுவதுமாயுள்ள அஜ்ஞானம் ஜீவனுக்கு ஸ்வப்பிரகாசமாயுள்ள அவன் ஸ்வரூபத்தை மறைக்காமல்போனாலும் ஜீவனுக்கும் அவனது ஸ்வரூபானந்தத்திற்கும் பேதத்தின் பிரதிநிதியாகிய விசேஷம் என்கிற மத்வமத பரமரஹஸ்ய பதார்த்தம் ஒன்று இருப்பதால் ஜீவனுடைய ஸ்வரூப ஸுகத்தையும் அவனது ஜ்ஞானம் பாரதந்திரியம் முதலிய தர்மங்களையும் பிரும்மஸ்வரூபம் பிரும்மத்தின் குணங்கள் மஹிமைமுதலியதையும் மறைத்துக்கொண்டிருப்பதால் ஸம்ஸாராவஸ்தையில் ஸ்வரூப ஸுகம் முதலியது ஜீவர்களுக்கு விளங்குகிறதில்லை. அஜ்ஞானம் போனபின்பு முக்தி தசையில் விளங்குகின்றது. அதிலும் ஸம்முக்தியோக்யர்களாயுள்ள ஜீவர்களுக்குத்தான் ஸ்வரூபபூதமான ஸுகம் ஸம்ஸாராவஸ்தையிலும் இருக்கிறது. ஆனால் மறைந்திருக்கிறது. அஸந் முக்தியோக்ய ஜீவர்களுக்கு ஸ்வரூப ஸுகம் இருக்குமென்பதில் பிரமாணமில்லை.

ஸம்முக்தியில் ஜீவர்களுக்கு அந்தக்கரணமில்லாமல்போனாலும் ஜீவர்களுடைய ஸ்வரூபசைதன்யப் பிரகாசத்தாலே ஸ்வரூபானந்தம் பிரும்மானந்தம் முதலியது விளங்குகின்றது.

பிரும்மா முதலிய ஸகல ஜீவர்களுடையவும் ஸ்வரூபானந்தமானது பிரும்மானந்தத்தின் பிரதிபிம்பமானதால் பிம்பத்தில் வித்யாஸமில்லாமலிருக்கப் பிரதிபிம்பத்தில் வித்யாஸம் ஏற்படுவதற்குக் காரணமென்னவென்றால் கூறுவாம். அந்தந்த ஜீவர்களிடத்தில் அனாதியாக பக்தி யோக்யதை முதலிய குணங்கள் பலவிதமாய் விசித்ரமாயிருப்பதால் அவர்களுடைய ஸ்வரூபானந்தமும் பலவிதமாய்த் தாரதம்யத்துடன் கூடியிருக்கிறது.

பரமேசுவரனுடைய அபரோக்ஷஜ்ஞானம் வந்த பிறகும் மனுஷ்யர்களாயுள்ள ஜீவர்கள் விஹிதமாயுள்ள எல்லாக் கர்மாக்களையும் மற்றவர்களைப்போல விதியின் நிர்ப்பந்தமில்லாமலே ஸ்வேச்சையாகச் செய்யவேண்டும். தேவஜீவர்கள் விஹித கர்மாக்களுள் சிலவற்றைச் செய்யலாம், சிலவற்றை விடலாம். பாதகமில்லை. பிரும்மாவானவர் உயர்ந்தஜீவனானதலால் விஹிதமோநிஷித்த கர்மமோஎதாயிருந்தாலும் தடங்கலில்லாமல் யதேஷ்டமாக ஆச்ரயிக்கவேண்டும். முக்திகாலத்திலும் ஜீவர்கள் பகவானுடைய மாஹாத்மியங்களை அறிந்து அவரிடத்தில் ஸ்நேஹரூபமான பக்தியையும் பகவானுடைய உபாஸனத்தையும் செய்யவேண்டும்.

அவித்யை நீங்குதலாகிய முக்திக்குப் பிறகுங்கூடச் சில ஜீவர்களுக்கு ஸத்கர்மங்களை அனுஷ்டிக்காமலோ நிஷித்த கர்மங்களை அனுஷ்டித்தோ உண்டாகும் தோஷத்தால் பகவானுடைய இச்சையினுல் அந்த ஜீவர்களுடைய ஸ்வரூபானந்தத்திற்கும் பிருமானந்தத்திற்கும் கொஞ்சம் அப்பிரகாசம் ஏற்படும். ஆகையால் அவர்கள் நிஷித்தங்களை அனுஷ்டிக்காமல் ஸத் கர்மங்களை அனுஷ்டிக்கவேண்டும். அபரோக்ஷஜ்ஞானம் வந்தாலும் அந்தந்த ஜீவனுக்குறிய ஆனந்தத்தை அடைவதற்கு ஹேதுவான பரமகாஷ்டாபன்னமான பக்தி இல்லாமல்போனுல் அதனுல் ஏற்படும் ஸம்ஸாரமோசகமான பகவத் பிரஸாதம் ஏற்படாதாகையால் ஸம்ஸாரபந்தம் அனுவிருத்திக்கும். இதுதான் ஜீவன் முக்தி எனப்படும். பக்தியிருந்தால் பகவத் பிரஸாதம் கிடைக்குமானதால் பிராப்த கர்மாதீனமான ஸகல ஸாம்ஸாரிக துக்கங்களும் விலகி இயற்கையின் மேலும் கீழுமாய்ப் பலவிதமாயுள்ள ஸ்வரூபானந்தாவிர்பாவம் பிறகு முக்தியில் ஏற்படும். ஜ்ஞானம் வந்த பிறகு அகார்யங்களைச் செய்தாலும் ஸகல ஸாம்ஸாரிக துக்கங்களும் விலகுவது முக்தியில் நிச்சயம். ஆனுலும் அகார்யங்களைச் செய்தால் முக்தியில் ஆனந்தம் குறையும். ஆகையால் அகார்யங்களைச் செய்யாமலும், சுப கர்மாக்களையும் பகவதுபாஸனங்களையும் பகவத் பக்தியையும் செய்யவேண்டும். அப்படிச் செய்தால் அவ்வளவுக்கவ்வளவு முக்தியில் ஆனந்தம் அதிகமாக ஆவிர்பவிக்கும்.

(தொடரும்) போலகம் சு. ஸ்ரீராமசாஸ்திரிகள்.

ஐசுவரியத்தை அடையும் வழி.

பண்டித ஜனங்கள் முதல் பாமர ஜனங்கள் வரை கொஞ்சங் கூட தாரதம்மியமில்லாமல் ஒவ்வொருவரும் நான் மஹாலக்ஷ்மீ கடாக்ஷத்தால் ஸர்வைசுவர்ய ஸம்பந்நனுகி ஸர்வ ஸௌக்கியத்தையடையவேணும், என்று நினைப்பது ஸஹஜமாயிருக்கிறது. ஆனால் அந்த லக்ஷ்மீகடாக்ஷத்தால் ஸர்வைசுவர்யம் உண்டாவதற்கு (பூர்வரூபம்) முன்னடையாளம் என்ன, அப்படியே அது விலகுவதற்கு முன்னடையாளம் என்ன என்கிற இந்த இரண்டும் தெரிந்தால் லக்ஷ்மீ பிராப்திக்கு ஸாதனத்தை அனுஷ்டானம் செய்து பலவித பாக்கியத்தையுமடையலாம். மஹாலக்ஷ்மி விலகுவதற்கு ஸாதனமின்னதென்று நிச்சயமாய்த் தெரிந்தால் அந்த ஸாதனத்தை அனுஷ்டிக்காமல் மஹாலக்ஷ்மீ தன்னைவிட்டு விலகாமலே இருக்கும்படி ஸ்திரப்படுத்திக்கொள்ளலாம். அந்த இரண்டுவழியும் தெரியாமலே ஜனங்கள் தனக்குத்தோன்றியதெல்லாம் ஐசுவரியம் உண்டாவதற்கு வழி என்று தத்தளிக்கிறார்கள். ஸர்வ ஜனங்களிடத்தில் தயவுகொண்ட தர்மபுத்திரர் தனது தாத்தாவான பீஷ்மாச்சாரியாரைப்பார்த்து மஹாலக்ஷ்மீ உண்டாகிற வழியையும் மஹாலக்ஷ்மீ விலகாமலிருப்பதற்கு வழியையும் விசதமாய்ச் சொல்லவேண்டும் என்று கேட்க அப்போது பீஷ்மாச்சாரியாரவர்கள் மஹாபாரதத்தில் சாந்திபர்வாவில் 228-வது அத்தியாயத்தில் ஓ! தர்மபுத்திரரே, நீர் கேட்ட உபாயத்தைப் பற்றி ஸாக்ஷாத் மஹாலக்ஷ்மீக்கும் தேவேந்திரனுக்கும் நடந்த ஸம்வாதரூபமான ஒரு ப்ராசீன (இதிஹாஸம்) கதை இருக்கிறது. அதைச் சொல்லுகிறேன் அதை ஜாக்கிரதையாய்க் கேழ்க்கவேணும் என்றுபீஷ்மாசாரியாரவர்கள் சொல்ல ஆரம்பித்தார்கள். அதிகமான தபோவிருத்தியால் (உச்சாவச) மேல்கீழான ஸமஸ்த லோகங்களையும் பிரத்தியக்ஷமாகவே பார்க்கும் ஸாமர்த்தியம் பெற்ற நாரதர் என்ற ஒரு தேவரிஷியானவர் தன்னுடைய திவ்ய தேஜஸ்ஸின் மஹிமையால் மூன்றுலோகங்களிலும் தன்னிஷ்டப்படி ஸஞ்சரித்துக்கொண்டிருந்தார். ஒரு ஸமயம் அந்த நாரத பகவான் காலையில் எழுந்திருந்து கங்காஜலத்தில் ஸ்நாநம்செய்ய விருப்பங்கொண்டு கங்கோத்பத்தி ஸ்தலத்திற்குச் சென்றார். அதேஸமயத்தில் அதேயிடத்திற்குத் தேவேந்திரனும் வந்துசேர்ந்தான். அந்த நாரதரும் தேவேந்திரனும் ஸ்நாநம் முதலான

நித்யகர்மானுஷ்டான ஜபாதிகளை முடித்துக்கொண்டு தங்கநிற மான புஷ்பம்போல் மிருதுவான கங்கா நதியின் மணல் குன்றில் உட்கார்ந்துகொண்டு அனேக மஹரிஷிகள் சொல்லிக்கொண்டிருந்த கதைகளையெல்லாம் சொல்லிக்கொண்டிருந்தார்கள். கொஞ்ச நாழிகையாகவே அந்த தேவேந்திரனுக்கும் நாதருக்கும் எதிரில் கோடிஸூரியஸமமான ஒருதிவ்யதேஜஸ் ஆகாயத்தில் தெரிந்தது. ஆகா! இது என்னவென்று அவ்விருவர்களும் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கும் ஸமயத்தில் அந்த தேஜஸ் அவர்களுக்குச் சமீபத்திலேயே வந்தது. வரவா ஒரு திவ்ய ஸ்திரீவியக்தியாகத் தோன்றிற்று. அதி ஸமீபத்தில் வர அனேக அப்ஸரஸ்திரீகளால் சூழப்பட்டு திவ்யாபரணம் தரித்த தாமரை புஷ்ப மடலிலிருக்கும் ஸாக்ஷாத் மஹாலக்ஷ்மியே நேரில்வந்தாள். அந்த மஹாலக்ஷ்மீ விமானத்திலிருந்து இரங்கி நாத ரிஷியின் ஸமீபத்தில் சென்றாள். அந்த நாதபகவானை முன்னிட்டுக்கொண்டு தேவேந்திர மஹா ராஜா அந்த மஹாலக்ஷ்மீதேவியை விநயத்துடன் எதிர்கொண்டழைத்து கைகளைக் கூப்பிக்கொண்டு தன்னைத் தேவேந்திரன் என்பதாகத் தெரிவித்து அனேகவித ஸ்தோத்திரங்களைச்செய்து நாத மஹரிஷியும் கூட இருக்குங்காலத்தில் இந்திரன் எல்லாம் தெரிந்தவனாயிருந்தபோதிலும் அந்தஸமயம் மஹாலக்ஷ்மியைப் பார்த்து ஒரு வார்த்தை சொன்னான். அழகு சிரிப்புள்ள ஹே! தேவி!! நீ யார்? எந்தக்காரியத்திற்காக இங்குவந்தாய்? எங்கே இருந்து வருகிறாய்? எங்கே போகப்போகிறாய்? என்று நான்கு கேள்வி கேட்டான்.

மஹாலக்ஷ்மீ தேவேந்திரனைப்பார்த்துச் சொல்லுகிறாள். புண்ணியமுள்ளதான மூன்று லோகங்களிலுள்ள ஸ்தாவர ஜங்கம பிராணிகள் யாவரும் வெகு பிரயத்தினத்தால் லக்ஷ்மீயான என்னுடைய அருளால் ஐசுவரியத்தையே விரும்பி முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். நான் யாரென்றால் ஸூரிய கிரணங்களால் மலர்ந்ததாமரை புஷ்பத்தில் உண்டானவள். ஸர்வ பிராணிகளுடைய க்ஷேமத்திற்கே ஏற்பட்டவள். எனக்கு பத்மா ஸ்ரீ: பத்மமாலினீ லக்ஷ்மீ. பூதி. சிரத்தா. மேதா. ஸந்நதி. (நல்ல வணக்கம்) விஜிதி (ஜயம்) ஸ்திதி. த்ருதி. (தைரியம்) ஸித்தி ஸ்வாஹா. ஸ்வதா. நியதி. ஸ்மிருதி. இது முதலான அனேகம் பெயருண்டு. நான்தான் அனேக தேவதாஸ்வரூபியாக இருக்

கிறேன். தர்ம ஸ்வபாவமுள்ள எங்கும் ஜயம்பெற்ற அனேக ராஜாக்களுடைய ஸைன்னியங்களின்முன்னிலும் துவஜங்களிலும் தேசங்களிலும் பட்டணங்களிலும் வஸிக்கிறேன், இன்ன இன்ன குணமுள்ளவர்களிடத்தில் நான் வாஸம்செய்வேன் என்பதைச் சொல்லுகிறேன் கேள். யுத்தத்தில் திரும்பாமல் ஜயம்பெறும் பாராக்கிரம முள்ளவனிடத்திலிருப்பேன். நித்தியம் தர்மம் செய்கிறவனிடமிருப்பேன். மஹா புத்தியுள்ளவனிடத்திலும் பிராம்மண்ணிய முள்ளவனிடத்திலும் ஸத்தியம் பேசுகிறவனிடத்திலும் வணக்கமுள்ளவனிடத்திலும் தானம் செய்கிறவனிடத்திலும் எப்பொழுதும் வஸிப்பேன். முன் காலத்தில் அஸுரர்கள் கூட இவ்வித குணம் பொருந்தினவர்களாயிருந்ததால் அவாளிடத்திலுமிருந்தேன். இந்த குணங்களில்லாதவர்களிடத்தில் நானிருக்கவேமாட்டேன். நானிருப்பதற்கு இதுதானடையாளம் என்று லக்ஷ்மீ இந்திரனைப் பார்த்துச்சொன்னுள். அஸுரர்களிடத்தில் எந்தகுணமிருக்கும்பொழுது நீ வஸித்தாய், எந்த கெட்டகுணம் வந்தபோது நீ விலகிவிட்டாய் என்பதைச் சொல்லவேண்டும் என்று இந்திரன் கேழ்க்க லக்ஷ்மீ சொல்லுகிறுள். எவ்வித ஆபத்துக்கள் வந்தாலும் தைரியத்தை அவலம்பித்துத்தன்தர்மங்களைத்தவிருமலனுஷ்டானம்செய்யும் எல்லாபிராணிகளிடத்திலும் நான் வஸிப்பேன் என்றுள். பிராணிகளுக்குப் பொதுவாக நற்குணங்கள் ஏற்பட்டன. தானம் அத்தியயனம் யக்ஞம் தேவாளேயும் பிதிருக்களேயும் பூஜிப்பது, குருக்களேயும் அதிதிகளேயும் எப்பவும் பூஜிப்பது முதலியன நற்குணங்களாம். இவை விடாமல் ஸேவிப்பவர்களிடம் இருப்பேன். அஸுரர்கள் இதை சிற்சில ஸமயங்களில் விட்டுவிடுவதால் அவர்களே விட்டு விலகிவிட்டேன். எவராயிருந்தாலும் ஸ்வதர்மத்தை விடுவாராஞல் அவரிடம் தங்கமாட்டேன். எந்த ஆபத்திலும் ஸ்வதர்மத்தை ஆதரிப்பவர்களே ஒருபொழுதும் விடமாட்டேன். என்றுள். இந்த உபதேசத்தைக் கேட்டுக்கொண்டு தேவாராஜா மிகவும் ஸ்வதர்ம பரிபாலனத்தில்ஜாக்கிரதையாயிருந்தார். அதுபோலவேகுழந்தாய்! தர்மபுத்திரா!! நீயும் ஸ்வதர்மத்தைத் தவருமல்அனுஷ்டிப்பாயாக என்று பீஷ்மாசாரியார் உபதேசித்தார். அதுபோலவே எல்லோரும் தம் தம் தர்மத்தைத்தவருமல் செய்துவருவார்களாஞல் இஷ்டப்படி ஐசுவரியத்தையடையலாம். யாவரும் அப்படியே செய்வார்களாக.

சுப்பிரமணியன்.

சங்கரஜயந்தீ மஹோத்ஸவம்.

ஜம்புகேச்வரம் என்று ப்ரஸித்திவாய்ந்த திருவானைக்காவல் க்ஷேத்திரத்தில் ஸ்ரீ காஞ்சீகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகளவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீ ஜகத் குரு வித்யாஸ்தானத்தில் சங்கரஜயந்தீமஹோத்ஸவம் சித்திரைமீ 25உ சனிக்கிழமைதினம் ஆரம்பிக்கப்பட்டு 29உ புதன்கிழமை முடிய ஐந்துதினங்கள் அதிவிமரிசையாக நடைபெற்றது. ப்ரதி தினமும் காலையில் பாஷ்ய பாராயணமும் உபநிஷத்பாராயணமும் 8 மணியிலிருந்து 11மணி வரையிலும் நடந்தேறியது. செவ்வாய்க் கிழமை புதன்கிழமை இவ்விரண்டு தினங்களிலும் விசேஷமாக மஹாந்யாஸ பூர்வகமாக ஸ்ரீ ருத்ரஜபாதிகள் அபிஷேககாலத்தில் நடந்தேறியன. ஒவ்வொரு தினங்களிலும் ஸாயங்காலத்தில் ஸ்ரீ மதாசார்யாளுடைய மூர்த்திக்கு விசேஷமான அலங்காரங் கள் அரியபெரிய பிரஸங்கங்களும் நிறைவேறின. அதில் உத்ஸ வாரம்ப தினத்தன்று மேற்படி வித்தியாஸ்தானத்தின் தலைமை ஆசிரியரும் சாஸ்திர திலகமுமான பிரம்மஸ்ரீ போலகம் ஸ்ரீ ராம சாஸ்திரிகளவர்களால் ஆசார்யாளுடைய அவதார பர்யந்தமான சரித்திரம் வெகு அழகாக மேல் கோட்பாடுகளுடன் உபந்ய ஸிக்கப்பட்டது. அதின் ஸாராம்சமாவது ஆசார்யாளுடைய அவதாரமானது ஞானசக்தி ப்ரதானமாயுள்ளது. பௌத்தர்கள் முதலிய நாஸ்திகர்களின் கோலாஹலத்தினால் உலகத்திற்கே பெருத்தகலக்கம் எற்பட்டபொழுது நமது ஆசார்யாள் அவதாரம் செய்து அவர்கள் மதத்தை தலையெடுக்கவொட்டாது அடித்து வேதத்தின் ப்ராமாண்யத்தை நிலைநாட்டினார்கள். குமாரிலபட்டர் முதலிய ஆஸ்திகர்களால்கூட வேதம் எல்லா காண்டங்களுக்கும் ப்ராமாண்யம் ஸ்தாபிக்கப்படவில்லை. ஆகையால் நமது ஆசார் யாள் எல்லா காண்டங்களுக்கும் ப்ராமாண்யத்தை ஸ்தாபித்து ப்ரமாநுக்ரஹம் செய்துள்ளார். உலகத்தில் எவற்றாலும் பாதிக்கப் படாமல் ஒரேவிதமாக இருக்கும் ஞானம்தான் நல்ல உண்மை யான ஞானம் யுக்திகளைக்கொண்டு விசாரித்து அதனால் ஒரு தீர்மானத்திற்கு வருவது என்றால் அது ஸாத்யமாகாது. யுக்தி வாதம் நிலைத்ததல்ல, பல புத்திசாலிகளால் பலவிதமாக அநு

மானம் செய்யப்பட்டாலும் வஸ்துதத்வம் பலமாதிரியாக இருக்கமுடியாது क्रियायामेव विकल्पो न वस्तुनि । "கிரியையாற்றான் விகற்பமுண்டு வஸ்துவிலிருக்காது" என்றல்லவா ஸித்தாந்தம். ஆகவே பலவிதமான அறிவுகள் உண்டானால் எது சரியென்று யுக்திகளால் தீர்மானிக்கச் சாத்தியமாகாது. ஆகவே வேதம் என்ற ப்ரமாணத்தினால் ஏற்படும் அறிவுதான் உண்மையான அறிவு. அத்தகைய அறிவை அந்த வேதத்திலிருந்து விளக்கிக் காட்டியது நமது ஆசார்யாளே. ஆகையால் அவ்வாசிரியரிடத்தில் நாம் சிறந்தபக்தி பண்ணவேண்டும் என்று ஆசார்யாளின் பெருமையை அவாளின் சரித்திர பூர்வகமாக விளக்கிக் காட்டினார்கள். இரண்டாவது நாள் பிரம்மஸ்ரீ கவிரத்னம் ஸ்ரீமடம் ஆஸ்தானவித்வான் ப. பஞ்சாபகேச சாஸ்திரிகள் ஸந்யாஸ ஸ்வீகாரம் என்ற விஷயத்தை அழகான ஸம்ஸ்கிருத ச்லோகங்களின் வரிசைகளோடு ஜனமனோரஞ்சகமாக உபந்யாஸம் செய்தார்கள். மூன்றாவதுநாள் பிரம்மஸ்ரீ மேலக்காவேரி சிவராம சாஸ்திரிகள் ஆசார்யாள் திக்குவிஜயம் என்ற விஷயத்தை உபந்யஸித்தார்கள். நான்காவதுநாள் பிரம்மஸ்ரீ வ்யாகரண சிரோமணி ராமஸ்வாமி சாஸ்திரிகள் காஞ்சீ காமகோடி பீடஸ்தாபனம்" என்ற விஷயத்தை எளியநடையில் ஜனங்களுக்குப்பரமானந்தத்தையுண்டுபண்ணும்படியாக நன்குபந்யஸித்தார்கள் ஆசார்யாளுடைய ஜயந்தீ தினத்தன்று விசேஷாராதனையும் அர்ச்சனைகளும் பிராம்மண ஸந்தர்ப்பணமும் இரவில் ஆசார்யபடத்தை முத்துச்சிவிகையிலேற்றி உபநிஷத் பாராயணத்துடனும் வாத்ய கோஷத்துடனும் ஊர்வலம் வந்து மடம் கார்யதர்சி மகா-ா-ஸ்ரீ ஜயராம அய்யர் அவர்களுள்பட எல்லோர்களும் பரமானந்தமடைந்தனர். இவ்விதம் எல்லா கார்யங்களுக்கும் கூடவிருந்து சிரத்தையோடு கைங்கர்யம் செய்த கார்யதர்சி அவர்களுக்கும் அக்கலாசாலை உபாத்யாயர்களுக்குப் வித்யார்த்திகளுக்கும் அவ்வூர் மஹாஜனங்களுக்கும் ஆசார்யாள் அருள்புரிவாராக.

சுப்ரமண்யசாஸ்திரி.

19—5—32 வித்யார்த்தி. திருவானைக்காவல்.

பண்ணுருட்டி அக்கிரகாரத்தில் ஸ்ரீசங்கர ஜயந்தி
மகோத்ஸவக் கொண்டாட்டம்.

ஸ்ரீஜகத்குரு ஆசார்யஸ்வாமிகளவர்களால் அனுப்பிக்கப் பட்ட விபூதி குங்குமாக்ஷதாப்ரஸாதம் மஹா ஜனங்களுக்கு விநியோகிக்கப்பட்டது. ஷை அக்ரஹாரத்தில் சென்ற 10-5-32 க்கு ஆங்கிரஸவூ சித்திரைமீ 28-உ மங்களவாரம் காலையில் 8-மணிக்கு ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் அவர்களின் அவதார மூர்த்திக்கு சாஸ்திரோக்தமாய் கெடில நதியிலிருந்து பூர்ண கும் பத்துடன் பூஜைஸ்தலத்துக்கு வந்து கடஸ்தாபனம் செய்து அன்றுதினம் உபநிஷத் பாராயணங்களுடன் பூஜையும் நிவேத னமும் நடந்து எல்லோராலும் தரிசிக்கப்பட்டது. அன்றுதினம் ஸாயந்திரம் பிரும்மஸ்ரீ ஸ்ரீவத்ஸ வெ. ஸோமதேவசர்மா அவர் களால் ஸ்ரீசங்கரர் அவதாரத்தின் மகிமையைப்பற்றியும் அரிய தோர் உபந்யாஸம்செய்யப்பட்டது 11-5-32ஷை வூ சித்திரைமீ 29உ புதன்கிழமை வைசாக சுத்தபஞ்சமியன்றையதினம் காலை யில் பிராம்மணகோஷ்டியுடன் பஜனையும் வழக்கம்போல் மஹந் நியாஸம்,உபநிஷத்பாராயணங்களுடன் பூஜை.அபிஷேகம் ஸகஸ்ர நாம அர்ச்சனை நிவேதனம் முதலியவைகள் செய்து அதன் பிறகு பிராமண ஸந்தர்ப்பணையும் பல வர்ணாசிரமிகளுக்கு அன்ன தானமும் ஏழைகளுக்குக் கஞ்சியும் அன்று ஸாயங்காலம் ஸ்ரீ ஆசா ரிய மூர்த்தியின் உருவப்படத்தை அலங்கரித்து மேளவாத்தியங் களுடனும் பஜனை கோஷ்டியுடனும் வேதபாராயணம் முதலிய விருதுகளுடனும் பட்டணப் பிரவேசமும், அதன்பிறகு பானக பூஜையும் 12-5-32க்கு சித்திரைமீ 30உ குருவாரம் காலையில் பூஜை, அபிஷேகம்,நிவேதனம் முதலியவைகள் செய்தும் அன்று இராத்திரிக்குள் அம்பாளுக்கு லலிதா ஸகஸ்ரநாம அர்ச்சனையும் நிவேதனமும் அதன் பின்பு ராமுடு பாகவதர் அவர்களால் ஸத் கதா காலக்ஷேபமும் ஸாங்கோபாங்கமாய் நடந்திருக்கிற வைபவங்கள் ரொம்பவும் பக்திசிரத்தையுடன் ஆஸ்திகாபிமானி கள் எல்லோரும் நடத்தியது மிகவுங் கொண்டாடத்தக்கதாயிருக் கிறது. அதுபோல் பிரதிவருஷமும் அதிக பக்திசிரத்தையுடன் மேன்மேலும் கொண்டுதெய்வபக்திக்கும்ஆசார்யாளின் பிரஸாதத் திற்கும் பாத்திராளாய் இருப்பார்களென்றுஎதிர்பார்க்கப்படுகிறது.

ஸ்ரீமடம் முத்திராதிகாரி,ஸாம்பமூர்த்தி கனபாடிகள்.

சிவாகா பத்திரிகை.

कुंभसंभवमुनीन्द्र भाषया सोमदेवविबुधेन निर्मितम् ।
वीक्ष्य वत्सकुलकृष्णदेशिको शङ्करार्य विषयं प्रमोदते ॥

ஸ்ரீசங்கரோபதேச ரத்நமென்று மகுடஞ் சூட்டப்பட்ட ஸ்ரீகோசமானது சொன்னயம் பொருணயங்களால் மிகச் சிறப்புற்றுப் படிப்போர் மனதைக் கவரத்தக்கதான "சந்தணப்பொதியச் செந்தமிழ் முனிவன் ஆழ்ந்த மொழியாலமைக்கப்பெற்று ஸ்ரீசங்கரபகவத்பாதாசார்யாளின் திருவுருவப்படமும் ஒளிர்வதால் கையிலேந்தி விரித்தமாத்திரமே காண்பரியக் காக்ஷி அளிக்கின்றது.

ஸ்ரீமதாசார்யாள் திருவாய்மலர்ந்தருளின பற்பல இன்றியமையாத நூல்களிலுள்ள விசேஷார்த்த விஷயங்களை நவநீதம் போலும் கரதலாமலகம்போலும் அனைவருமனுபவித்து ஆனந்திக்குமாறு சுருக்கமாக பரிஷ்கரித்து வெளியுலாவச்செய்த நம் ஸ்ரீஸாஹித்யவாங்முக பூஷணம் ஸ்ரீவத்ஸ வெ. ஸோமதேவசர்மா அவர்களின் நன் முயற்சி புகழக்கூடியதே.

பல்லக்குச்சேரி ஆங்கிரஸ வைகாசி 4உ	வித்வான் அபிநவ ஸாஸ்வதி வாங்முக ரத்நகோச குருவர்ய நடாதூர் ஸ்வாமி கிருஷ்ணமாசார்ய:

ஸ்ரீ நடேசஸ்துதி.

नाथ त्वदंघ्रिमहमद्य तपःप्रभावात्
लभ्यं सभेश वचसैव निरर्थकेन ।
प्रेप्सामि मन्दमतिरीश तथापि यत्नः
स्यादेव देव सफलः करुणास्ति चेत्ते ॥११२॥

ஓ சபாபதே விசேஷ யோக மஹிமையால் அடையத்தகுந்த உம்முடைய திவ்யசரணத்தை இப்பொழுது விசேஷார்த்தரஹிதமான ஸ்துதி வசனத்தாலேயே மந்தபுத்தியுள்ள நான் அடைய

இச்சிக்கிறேன். ஆகிலும் ஓ தேவ என்னிடத்தில் தயையானது இருக்குமேயானால் இந்த யத்நமும் பலத்தோடு கூடியதாகவே ஆகும். 'வல்லவனுக்குப் புல்லாயுதம்' என்று பழமொழியல்லவா ஸ்ரீ ராமமூர்த்திக்கு காகாசுரனைச் சிக்ஷிப்பதில் புல்லும் பிர்மாஸ்திரமாகவில்லையா. உம்முடைய கருணையடைந்தவன் வல்லவன் அல்லவா. (112)

अप्पय्ययज्वतिलको विविधैस्तवैस्त्वा
मत्यद्भुतैर्निगमशाखिशिखार्थरूपैः ।
आह्लादयन्नधिजगाम तवाङ्घ्रिपद्मं
मन्दस्य मे नुतिरियं जनयेन्मुदं किम् ॥११३॥

ஸ்ரீ அப்பய்ய தீக்ஷித சிரேஷ்டர் வேதாந்தார்த்த ரூபங்களான அத்புத்தமங்களான அநேக ஸ்தோத்ரங்களாலே உம்மை திருப்திசெய்து உம்முடைய சரணகமலத்தை அடைந்தார். மந்தனை என்னுடைய இந்த ஸ்தோத்ரமானது உமக்கு எப்படி திருப்தியை உண்டுபண்ணும், அப்பய்யதீக்ஷிதர் குஞ்சிதாங்கிரி ஸ்தவம் முதலான அநேகஸ்துதிகளால் ஸ்ரீ நடேசருடைய பூர்ண கிருபைபெற்று அநேக திவ்ய கிரந்தங்கள் செய்து ஸ்ரீ நடராஜ ஸாயுஜ்யம் அடைந்தனர் என்பது அவருடைய சரித்திரத்தில் வெளியாகும்.

अभाति हाटकसभानटपादपद्मज्योतिर्मयो मे तरुणारुणोयम् ।

ஸ்வர்ணஸபையில் பிரகாசிக்கின்ற திவ்ய நடேசருடைய சரண கமலமாகிற பாலஸூர்யன் பிரகாசிக்கின்றான் என்று தேக வியோககாலத்தில் தீக்ஷிதேந்திரர்கள் கூறியதாகவும்

नूनं जरामरणघोरपिशाचकीर्णा संसारघोररजनी विरतिं प्रयाता,

ஜராமரணங்கள் என்ற பயங்கரமான பிசாசங்களால் சூழ்ந்த ஸம்ஸாரமென்றஇரவானது முடிவடைந்தது என்று ஷையார்புத்திரர்கள் பத்யபூர்த்தி செய்தார்கள் என்றும் ஷையார் சரித்திரத்தில் வெளிப்படை (113)

नालंकृतिर्मम नुतौ न च भावपुष्टिः
प्रासोऽपि नैव करुणादिरसोऽपि नैव ।
नूनं बुधेन्द्रनिवहेन विगर्हणीया
सम्मोदमीश कलयिष्यति किन्नु तस्मात् ॥११४॥

ஓ ஈச என்னுடையஸ்தோத்திரத்தில் அர்த்தாலங்காரங்கள் இல்லை தாத்பர்ய புஷ்டியும் இல்லை அர்த்தாலங்காரமான ப்ரபாவமும் இல்லை கருணாதி ரஸமும் இல்லை பண்டித ஸமூகத்தால் பரிஹஸிக்கத்தகுந்ததே. ஆகையால் உமக்கு எப்படி ஸந்தோஷத்தை உண்டுபண்ணப்போகிறது. (114)

कर्वन् विनद्यवदनांबु निषेचनं ते
भक्त्या मुदं शिवकिं रचयांचकारा ।
व्याधस्तथा मम नुतिर्भुवि गर्हितेयं
भक्त्या कृता नटपते जनयेत्प्रमोदम् ॥११२॥

ஓ பரமசிவா கண்ணப்பன் என்ற வேடன் பக்தியினாலே வாயில் உள்ள எச்சில்ஜலத்தை அபிஷேகம்செய்து உமக்கு திருப்தியை உண்டுபண்ணவில்லையா அதுபோல் ஓ நடநாத பக்தியினால் செய்யப்பட்ட என்னுடைய ஸ்துதியும் உமக்கு ஸந்தோஷத்தை உண்டுபண்ணும். (115)

शिवानन्दनहरी, स्तुतिः 6 स्तुतिः, मार्गावर्तितपादुका पशुपतेरंगाय कूर्चायते गण्डूषांबुनिषेचनं पुररिपोः दिव्याभिषेकायते । किञ्चित्भक्षित मांसशेषकबलं नव्योपदारायते भक्तिः किं न करोति अहो वनचरो भक्तावतंसायते ॥

வழியில் அடிக்கடி பழக்கப்பட்ட பாதரக்ஷையானது பரமசிவனுடைய அங்கத்துக்கு புருவ மத்யஸ்தானமாகின்றது. வாய் எச்சில் ஜலமானது திவ்யாபிஷேகமாகின்றது. ஸாப்பிட்ட சேஷமான மாம்ஸ கபளமானது திவ்ய நிவேதனமாகின்றது. பக்தி எதை செய்யாது வேடனும் பக்த சிரேஷ்டனாகின்றான். இந்த இதிஹாஸத்தை ஸ்ரீகாளஹஸ்தி புராணத்திலும் ஸ்ரீ சிவபக்திவிசேஷத்திலும் காண்க.

यत्तोऽयमीश भगवन् यशसे मदीयः
नास्त्येव किन्तु यशसा मम कार्यमस्ति ।
किन्तुत्वदीयचरणांबुजभक्तिवृद्धिः
सञ्जायतामिति विचिन्त्य कृतो हि भक्त्या ॥११६॥

ஓ! பகவன் இந்தஸ்துதி ரூப ரத்னமானது கீர்த்தியின்பொருட்டு செய்யப்படவில்லை. உம்முடைய சரணகமலத்தையே விரும்பு

கின்ற எனக்குக் கீர்த்தியினால் என்னபலன். உம்முடைய சாணா விந்த பக்தியின் விருத்தியானது உண்டாகவேணும் என்று எண் ணியே பக்தியினால் செய்யப்பட்டது. (116)

नाथ त्वदंघ्रिसरसीरुह पूजनार्थं
पूजोपयुक्तकुसुमादि यथा समृद्धि ।
भक्ता समर्प्य जननं कलयन्ति धन्यं
भक्तानुरक्त भगवन् करुणांबुराशे ॥११७॥

பக்தர்களிடத்தில் அனுராகம் உள்ள ஓ! கருணாநிதியே!! ஓ நாத! உம்முடைய சரணகமல பூஜையின்பொருட்டு பூஜைக்குபயோகமு ள்ளபுஷ்பம், சந்தனம்முதலான திரவ்ய ஸமிர்த்திகளை ஸமர்ப்பணம் செய்து ஜன்மாவை பக்த ஜனங்கள் எவ்விதம் ஸபலமாகச் செய்கின்றார்களோ. (117)

तद्वन्नटेश विनुती रचिता मयेयं
मन्दाग्रजेन भवदंघ्रिसरोजभक्त्या ।
स्वामिन् यथामति ततो नहि मेऽस्ति लज्जा
सत्त्वानुरूपकलनं किमु गर्हणीयम् ॥११८॥

பூஜார்த்தமான புஷ்பம் முதலான திரவ்யங்களை சரணகமலத்தில் ஸமர்ப்பணம் செய்வதுபோல் ஓ நடேசா! மந்த சிரேஷ்டனான என்னால் உம்முடைய சரணகமல பக்தியால் என்னுடைய புத் திக்கு ஏற்றவாறு செய்யப்பட்டது. ஆகையால் எனக்கு லஜ்ஜை இல்லை சக்திக்குத் தக்கவாறு செய்யப்பட்டக் கார்யமானது நிந்திக்கத்தகுந்ததா? (118)

ராஜா. சோமசேகர தீக்ஷிதர்.

மனுஸ்மிருதி அத்தியாயம் 2
சில வசனங்கள்.

1. கவி என்கிற பெயருடைய அங்கிரஸின் புத்ரன் சிறுவனுயினும் தன் அம்மாள்,சிற்றப்பன் முதலியவர்களுக்கு வேதம் கற்பித்தார். அவர்களைச் சிஷ்யர்களாகக் கிரஹித்து, சிறுவர்களே வாருங்கள் என்று அவர்களைக் கூப்பிட்டார்.

2. அவர்கள் கோபங்கொண்டு அவ்விஷயத்தைப்பற்றித் தேவதைகளைக் கேட்டார்கள். தேவதைகள் ஒன்றுகூடி „கவி என்ற சிறுவன் தங்களைக் குழந்தைகளே என்று கூப்பிட்டது நியாயந்தான்'' என்றார்கள்.

3. வேதந்தெரியாதவன் சிறுவன்; வேதமறிந்தவனே தகப்பன். ஞானிகள் வேதமறிந்தவனை பிதா என்றும் வேதமறியாதவனைச் சிசு என்றும் சொல்வது வழக்கம்.

4. பெருமை என்பது வயதால் ஆகாது. நரைத்தமயிரால் அல்ல, பொருள், பந்துக்கள் மிகுதியாலுமல்ல. „எவன் வேதவேதாந்தங்களறிந்தவனே அவன்தான் எங்கள் அபிப்பிராயத்தில் பெரியவன் என்று ரிஷிகள் கூறியிருக்கிறார்கள்.

5. பிராம்மணனுக்கு வேதமறிதலாலும், க்ஷத்ரியனுக்கு வீர்யத்தாலும், வைச்யனுக்கு தனதான்னியத்தாலும் பெருமை உண்டாகிறது. சூத்ரனுக்குத்தான் வயதினல் பெருமை.

6. வேதமறியாத பிராம்மணன், மரத்தால் செய்யப்பட்ட யானைத்தோலால் செய்யப்பட்ட மான் இவைகளைப்போல் ஜாதிப் பெயரைமாத்திரம் வஹிக்கிறவன். தனக்கேற்பட்ட காரியத்தைச் செய்யச் சக்தியற்றவன்.

7. பிராணிகளுக்கு அவரவர்கள் பெருமைக்கு உரியவைகளை இலகுவாய், ச்ரமமன்னியில் கற்பிக்கவேண்டும். தர்மப்படி உபதேசிக்க விருப்பமுள்ளவர் இனிமையாயும் மிருதுவாயும் பேசவேண்டும்.

8. எவனுடைய பேச்சில் பொய் இல்லையோ மனதில் ராகத்வேஷமில்லையோ, எவன் இவ் விஷயங்களில் எப்பொழுதும் வெகு ஜாக்கிரதையாயிருக்கிறானோ அவன் வேதாந்த சாஸ்திரத்தாலுண்டாகும் மோக்ஷம் முதலான பயன் முழுமையும் அடைகிறான்.

9. எவ்வித கஷ்டத்திலும் பிறர் மனதுக்கு அதிக வருத்தத்தை உண்டுபண்ணும்படியான வார்த்தைகளை நாம் பேசக்கூடியது நம்முடைய எண்ணத்தினாலும் செய்கையினாலும் பிறருக்குக் கெடுதி உண்டாக்கக்கூடாது. பிறருக்கு நடுக்கம் உண்டுபண்ணி ஸ்வர்க்கமடைய விரோதமாயிருக்கிற பேச்சை ஒருபொழுதும் நாம் பேசக்கூடாது.

10. எப்பொழுதும் பிராமணன் பிறரால் உண்டாகும் மரியாதையை விஷம்போல் பாவித்து நடுங்கித் தள்ளவேண்டும். பிறரால் வரக்கூடிய அவமதிப்பை அமிருதம்போல் நினைத்துப் பிரார்த்திக்கவேண்டும். அதாவது மானம், அவமானம் இவ்விரண்டிலும் மனது மாறக்கூடாது.

(தொடரும்) R. ஸ்வாமிநாதய்யர்.

சிறுவருக்கான சிறுகதைக்கொத்து.

கல்மாஷபாதன்.

இக்ஷ்வாகுவம்சத்தில் கல்மாஷபாதன் என்று ஓர் அரசனிருந்தான். அவன் வேட்டையாட வனஞ்சென்றான். வாடிவதங்கி ஓர் ஒற்றைப்பாதை வழியாகச் சென்றான். அங்கே சக்தி என்பவர் எதிரில் வந்தார். இவர் வஸிஷ்டாது மூத்த புதல்வர். இவருடன் பிறந்தவர் தொண்ணூற்றொன்பது பேர். கல்மாஷபாதன் சக்தியைப் பார்த்து வழிவிடு என்றான்.

சக்தி சொன்னார். அரசனே! நீதான் என்னைக்கண்டு விலகவேண்டும். வழிவிடவேண்டும். கிழவன், பயந்தவன், ஸ்நாதகன்,

பெண், ரோகி, கல்யாணப்பிள்ளை, வண்டிக்காரன் இவர்களுக்கு மற்றவர், வழிவிடவேண்டும். இதைக்கேட்டும் அரசன் விலகு என்றான். சக்தி வழிவிடாமலிருந்தார். அரசனுக்குக் கோபம் வந்தது.

கோபம் வந்தவன் எதைத்தான்செய்யமாட்டான்? சக்தியைச் சவுக்கால் அடித்தான், இது நியாயமா ? மஹாபாபம் செய்தால் கைமேல்கூலி ! ராக்ஷஸனாகப்போ என்று அரசனைச் சக்தி சபித்தார். இதைப் பார்த்துக்கொண்டிருந்தார் விச்வாமித்திரர். கிங்கரன் என்னும் ஓர் ராக்ஷஸனை அரசன்மேல் ஏவினார்.

அரசன் ஊருக்குப்போனான். வழியில் ஓர் பிராமணன் வந்தான். மாம்ஸத்துடன் அன்னம் கொடு என்றான். அரசன் ஆகட்டும் என்று ஊர்சென்றான். இதை மறந்துவிட்டான். பாதி ராத்திரியில் நினைத்துக்கொண்டான். பரிசாரகனை அழைத்தான். அந்த பிராமணனுக்கு அன்னமிடு என்றான். அவன் நரமாம்ஸத்துடன் அன்னமளித்தான்.

அதை ப்ராமணன் ஞானக் கண்ணால் அறிந்தான். அரசனை ராக்ஷஸனாகப்போ! என்று சபித்தான். ஆகலால் கல்மாஷபாதன் ராக்ஷஸனானான். சக்தி முதலிய நூறு வஸிஷ்டர் புத்ரரையும் புஜித்தான். வஸிஷ்டர் புத்ரசோகத்தால் தவித்தார். ப்ராணனை விட முயன்றார். கைகால்களைக்கட்டிக்கொண்டு நதியில் விழுந்தார்.

அது அவரைக் கரையேற்றிவிட்டது. அந்நதிக்கு விபாசா என்று பெயர்வந்தது. மற்றோர் நதியில் விழுந்தார். அது இவரைக்கண்டு தூரக ஓடியது. ஆகலால் சதத்ரு என்று பெயர் பெற்றது. வஸிஷ்டர் ஆச்ரமத்திற்குத் திரும்பினார். அவர் பின்னால் வேதசப்தம் கேட்டது. திரும்பிப்பார்த்தார். அத்ருச்யந்தி என்பவளைக் கண்டார்.

அவள் சக்தியின் மனைவி. வஸிஷ்டரின் நாட்டுப்பெண். அவள் வயிற்றில் ஓர் குழந்தையிருந்தது. அதுவே வேதத்தைச் சொன்னது. அதன்பெயர் பாராசரர். இவர்களைப் பக்ஷிக்கக் கல்மாஷபாதன் ஓடிவந்தான். வஸிஷ்டர் ஹுங்காரம்செய்தார். அசையாமல் நின்றுவிட்டானவன். ஜலத்தை ப்ரோக்ஷித்தார். அவன் சாபமகன்றது.

பழையபடி அரசனானன். அம் முனிவரைப் பணிந்தான். அவர் புத்ரர்களைக்கொன்றதற்காக வருந்தினன். அவர் இனியாவது நீ பிராமணனைக் கொல்லாதே என்றார், தன் மனைவியினிடம் ஓர் புத்திரனைப்பெற வேண்டினன். அவன் ராக்ஷஸனாக இருந்தானல்லவா? அப்போது ஓர் பிராமணனைக் கொன்றான். அவர்மனைவி கொல்லாதே என்றாள்,

இவன் அதை லக்ஷ்யம் செய்யவில்லை, ஆதலால் அவள் சபித்தாள். உன் மனைவியைத் தொட்டால் நீ இறப்பாய் என்றாள். ஆதலால் வஸிஷ்டரை வேண்டினன். அவர் அருளால் அவன் மனைவிகர்ப்பமானாள். பன்னிரண்டுவருஷமாகியும் குழந்தை பிறக்கவில்லை. வயிற்றைக் கல்லாலடித்துக்கொண்டாள். அச்மகன் என்ற குழந்தைபிறந்தது.

பிறர் தூண்டுதலால் கல்மாஷபாதன் அதர்மத்தைச்செய்தான் ஆதலால் பல கஷ்டங்களை அநுபவித்தான். அவனைப்போல் பிறர் கலஹத்தைக் கேட்காதே? தன் புத்ரனைக்கொன்றபாபிக்கும் வஸிஷ்டர் பேருபகாரம் செய்தார்!! அவரைப்போல் பரோபகாரம் செய், த்ரோஹியையும் மன்னித்துவிடு என்றார்.

ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவசர்மா.

வாரவிருத்தாந்தம்.

விசிஷ்டாத்வைதஸபை. 9 10௳ ஸ்ரீ பெரம்பூதூரில் ஷை ஸபை ஓர் நாயகர்தலைமையில் நடந்தது. இரண்டொரு பிராமண உபன்யாஸகர்களும் இருந்தனர். மற்றோர் பலர் பேசினர். ஸ்ரீ பாஷ்யகாரரெனும் ஸ்ரீ ராமாநுஜர் பிறந்த ஊரில் ஷையார் உத்ஸவதினத்தில் ஷை ஸபைநடந்தது மிக ச்லாக்யமே. பிராமணேதரர்கள் மதாபிமானங்கொண்டு ஸபை நடத்துவதைக் கொண்டாடுகிறோம்.

விவாஹோபநயநதர்மம். 11உ வடாற்காடுஜில்லா பள்ளிக்கொண்டையில் ஷடி தர்மத்தை நடத்தும் ஸபையார் 17 உபநயநமும், 25 விவாஹமும் செய்துவைத்தனர். ஏழைகள் ஷடி கர்மாக்களைச் செய்யமுடியாமல் தவிக்கும்போது இவ்வுத்தம கைங்கர்யத்தை இலவசமாக செய்துவைப்பது மிக்க தர்மம். ஒரு ஜாதியாருக்குமட்டிலுமில்லாமல் ஸகலருக்கும் உதவிபுரியு மிச்சபையை எவரே கொண்டாடாதவர்? விதிப்படி விவாஹாதிகளைச் செய்து வீண்செலவை அகற்றி நற்ப்ரசாரம்செய்துவரின் இதைப்போல் உபகாரமான ஸபை வேறில்லை எனலாம்.

நவநீதகிருஷ்ணனுக்கு அபிஷேகம். 16உ நாகப்பட்டணத்திற்கருகிலுள்ள வங்காரமாவடிஎன்னும் கிராமத்தில் ஷடிகும்பாபிஷேகம் நடந்தது. அன்னதாநம் சிறப்பாக நடந்தது. ஓர் நாயடு இவ்வுத்தம கைங்கரியத்திற்குக் காரணமாக இருந்தார். ஸ்ரீ கிருஷ்ணகடாக்ஷத்திற்குப் பாத்ரமான அவரைக்கொண்டாடுகிறோம்.

நல்ல உபன்யாஸம். 17உ திருவண்ணாமலையில் போலீஸ் ஸர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஸ்ரீமான் நாராயணய்யரவர்கள் மனைவி ஸ்திரீதர்மம் என்பதைப்பற்றிஓர் உபன்யாஸம் செய்தாள். பெண்களுக்கு அவச்யமாக வேண்டிய வைதிகக் கல்வியைக் கூறி என்னபடித்தாலும் புருஷனுக்கு அடங்கிநடந்து வீட்டுவேலையை கவனிக்கும்படி வற்புறுத்தினாள். இக்காலத்தில் அதிலும் பெண்களே இப்படிப் பேசுவதென்றால் அது மிக கொண்டாடத்தக்க விஷயமே.

நித்தியான்னதாநம். 17உ சங்கரநயினார்கோவிலில் ஸ்ரீமான் வெங்கிடசாயர் பிரதிதிநம் சில அதிதிகளுக்கு அன்னதாநம் நியதமாக செய்வதோடு வரும் யாத்ரீகர்களுக்கு ஸத்ரம் கட்டி இடமளிப்பதாக விஷயம் வெளிவந்தது. வந்தவருக்கு இடமளிப்பதும் அன்னதாநம்செய்வதும் உத்தமதர்மம். தார்மிகர்வாழ்க.

உனக்காக ஊரைக்கெடுக்காதே. 18உ சென்னை ஹை கோர்ட்டில் வெங்கிடஜோகய்யா என்பவர் தன் தமையனது புதல்வனை வேறொருவர் தூக்கிச்சென்று ஓர் பெண்ணைக்கொடுத்து மணம்செயவிப்பதாகவும் அதைச் சாரதாசட்டப்படி தடுக்க வேண்டுமென்று வ்யாஜ்யம் தொடுத்தார். தன் நலத்திற்காக அநாவச்யமாய் இறந்துகிடக்கும் சாரதாசட்டத்தை ஏன் பிழைப்பிக்கவேண்டும். வேறு சட்டமில்லையா?

ஏனைய உத்யோகஸ்தர்பின்பற்றுக. 10உ பெங்களூரில் ஸ்ரீ சங்கரஜயந்தி உத்ஸவம் திவான்பகதூர் மாஜிதிவான் வி. பி. மாதவராவ் தலைமையில் கொண்டாடப்பட்டது. தலைவர் ஓர் ரஸமான அறிய உபன்யாஸம் செய்தார். ஹிந்துவாகப் பிறந்ததற்கே நாம் கௌரவமும் ஸந்தோஷமும் அடையவேண்டுமென்றார். உத்யோகம் வஹிப்போர் அல்லது வஹித்தவர் மத விஷயத்தில் தலையிடுவது அவமானமெனக் கருதி பலமாந்தர் பிறவியை நிஷ்பலமாக்குகின்றனர். மதாபிமானங்கொண்டு ஜன்மாவை ஸபலமாக்குவரா?

பவரோக மகலுக. 19உ பெங்களூர் வியாபாரியான ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸய்யா பிணியை அகற்றி ஆரோக்யத்தைப் பெற இருபதினாயிரம் ரூபா வைத்யசாலைக்கு நன்கொடை அளித்தார். ப்ராணனைவிட பணத்தை மேலாகநினைக்கு மிக்காலத்தே பெருந்தியாகம்செய்த இவர் பவப்பிணியை அகற்ற ஞானம் பெறுவாராக.

ஸ்ரீவத்ஸ. வே. ஸோமதேவசர்மா.